# அத்தியாயம் – 11

## மூன்று வழிகள் – விசாலமான வழி, நெருக்கமான வழி, பெரும்பாதையான வழி

கேட்டுக்குப் போகிற விசாலமான வழி – ஜீவனுக்குப் போகிற நெருக்கமான வழி – ஜீவன் என்றால் என்ன? – தெய்வீக சுபாவம் – தெய்வீக சுபாவத்திற்கும் மனித சுபாவத்திற்கும் உள்ள சம்பந்தம் – நெருக்கமான வழியின் முடிவில் வைக்கப்பட்டிருக்கும் பரிசு – சுவிசேஷ யுகத்திற்கு மட்டுமே உரிய பரம அழைப்பு – நெருக்கமான வழியின் கடினமும், அபாயங்களும் – பெரும்பாதையாகிய பரிசுத்த வழி.

“கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமாகவும் இருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப்போகிற வாசல் எத்தனை நெருக்கமானது. அவ்வழி எத்தனை இடுக்கமானது. அவ்வழியைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர்.” (மத். 7:13, 14) (Diaglott)

“அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப்போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை; அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்.” (ஏசா. 35:8–9)

“விசாலமான வழி,” “நெருக்கமான வழி” மற்றும் “பெரும்பாதையான வழி” என்ற மூன்று வழிகளும் நம் கவனத்தை வேதாகமத்தின் பக்கமாக ஈர்க்கின்றன.

### கேட்டுக்குச் செல்லும் விசாலமான வழி

விழுந்துபோன மனுக்குலத்தார் நடப்பதற்கு சுலபமாக இருப்பதனாலேயே இவ்வழிக்கு இந்தப் பெயரிடப்பட்டது. ஆறாயிரம்



வருடங்களுக்கு முன்பதாக, ஆதாம் (முழு மனுக்குலமும் அவருக்குள்ளானதாக) மீறுதலுக்குட்பட்டு ஒரு பாவியானபோது, அழிவுக்குரிய தண்டனையைப் பெற்று, இந்த வழியில் முதலாவது பிரவேசித்து, தொளாயிரத்து முப்பது வருடங்களாக அதில் நடந்து, அதன் முடிவாகிய அழிவை அடைந்தார். மனுக்குலத்திற்கு ஆதாம் பிரதிநிதியாக இருந்தபடியால், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கீழ்நோக்கிச் செல்லும் பாதை அதிகமதிகமாகத் தேய்ந்துபோனதால், மனிதர்கள் அதிவிரைவாக அழிவுக்குச் செல்கின்றனர். ஏனெனில், இவ்வழியானது பாவத்தினால் வழுக்கும் தன்மையையும், சேற்றையும், பளிங்கைப்போல வழுவழுப்பும் உள்ளதுமானபடியால் அழிவு சீக்கிரம் நேரிடுகிறது. அவ்வழி வழுக்கும் தன்மையை உடையதாய் இருப்பதோடு மட்டுமல்லாமல், மனுக்குலம் இந்த அழிவை எதிர்த்துப்போராடும் சக்தியை நாளுக்குநாள் இழந்துவருவதால், தற்போதைய மனிதனின் சராசரி ஆயுள்காலம் 35 வருடங்கள் மட்டுமே. (இந்த புத்தகம் 1886ல் எழுதப்பட்டது) தற்போது ஜீவிக்கும் மனிதன், முதல் மனிதனாகிய ஆதாமைப் பார்க்கிலும் 900 வருடங்கள் முன்பாகவே இந்த வழியில்சென்று, அதன் முடிவாகிய அழிவை அடைகிறான்.

இந்த விசாலமான கீழ்நோக்கிச் செல்லும் வழியை ஆதாமின் சந்ததியார் 6000 வருடங்களாக நிலையாகப் பற்றிக்கொண்டனர். ஒருசிலர் மட்டும் தங்களுடைய வழியை மாற்ற முயன்று, மேல்நோக்கிய வழியில் நடக்க பிரயாசப்பட்டனர். மேல்நோக்கிய வழியைக் கண்டுபிடித்து முந்தைய பரிபூரண நிலையை அடைவது இயலாத காரியம் என்றாலும், அதற்காக முயற்சி செய்த சிலரின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியவை. அம்முயற்சிகளால் சிறுசிறு பலன்களும் இல்லாமல் இல்லை. 6000 வருடங்களாக மனுக்குலத்தை பாவமும், மரணமும் ஈவு இரக்கமில்லாமல் ஆட்சிசெய்து, விசாலமான பாதையில் அவர்களை அழிவுக்குள் நடத்திச் சென்றிருக்கிறது, இவ்வழியில் இருந்து தப்பித்து வெளிச்சத்திற்கு செல்லும் மார்க்கம் சுவிசேஷ யுகத்திற்கு முன்பு வரை ஏற்படுத்தப்படவில்லை. சுவிசேஷ யுகத்திற்கு முந்தைய யுகங்களின் சம்பவங்கள், பிற்கால சம்பங்களுக்கு நிழலாகவும், அடையாளங்களாகவும், அவைகளின் மூலம் நம்பிக்கையின் வெளிச்சம் சிறிதளவு வெளிப்பட்டது. இதனை சிலர் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு அதன்படி செய்துவந்தனர். ஆயினும், நம் கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்து பிரசன்னமாகும் வரையிலும்,

மீட்பும் பாவமன்னிப்புமாகிய நற்செய்திகளும் இதன் பயனாக உண்டாகும் அழிவிலிருந்து உயிர்த்தெழுதலும், அப்போஸ்தர்களால் அறிவிக்கப்படும்வரையிலும் ஜீவனும் அழியாமையும் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படவில்லை. (2 தீமோ. 1:10) இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் போதித்த போதனைகள் ஜீவனை வெளியரங்கமாக்கின. மீட்பரின் பலி மற்றும் புண்ணியத்தின் அடிப்படையில் அனைத்து மனுக்குலமும் ஜீவனுக்கு திரும்ப கொண்டுவரப்படுதலையும் வெளியரங்கமாக்கின. இவ்வாறு ஜீவனைத் திரும்பக்கொடுத்தல் பழைய ஏற்பாட்டில் அநேக நிழல்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. இயேசுவும் அப்போஸ்தலர்களும் சுவிசேஷ யுகத் திருச்சபையாருக்கு வைக்கப்பட்டிருக்கிற பரம அழைப்பின் பந்தயப் பொருளாகிய அழியாமையையும் வெளியரங்கமாக்கியிருக்கிறார்கள்.

அழிவுக்குப்போகிற விசாலமான வழியிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு வழி ஏற்படுத்தப்பட்டிருப்பதை சுவிசேஷத்தின் மூலம் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தாலும், மனுக்குலம் பாவத்தினால் விழுந்து போனதினாலும், விரோதியாகிய சாத்தானால் குருடாக்கப்பட்டிருப்பதாலும், திரளான ஜனங்கள் இந்நற்செய்திக்கு செவி சாய்ப்பதில்லை. கிறிஸ்துவின் மூலமாக மனித ஜீவன் திரும்பக் கொடுக்கப்படும் என்ற ஜீவனுக்குரிய வாக்குத்தத்தத்தை நன்றியுணர்வோடு தற்போது ஏற்றுக்கொள்பவர்களுக்கு ஒரு புதிய மார்க்கம் திறக்கப்பட்டிருப்பதை கவனித்திருக்கிறார்கள். இதில் நுழைகின்ற உடன்படிக்கை செய்துகொண்ட விசுவாசிகள், மனித சுபாவத்திற்கு மேலான, மகா உன்னதமான சுபாவமாகிய ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள். இந்தப் புதிய மார்க்கமானது இராஜரீக ஆசாரியக் கூட்டத்தாராகிய நமக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம் கர்த்தர் கூறியிருக்கிறார். (எபி. 10:20)

## ஜீவனுக்குப் போகிற நெருக்கமான வழி

இந்த வழி நெருக்கமானதாக இருக்கிறபடியால், அநேகர் அழிவுக்குச் செல்கிற விசாலமான வழியையே தெரிந்தெடுக்கின்றனர். “ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும் (கடினம்), வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.”



இந்த நெருக்கமான (இடுக்கமான) வழியைப்பற்றியும் அதன் அபாயங்களையும், கஷ்டங்களைப் பற்றியும், சிந்திப்பதற்கு முன்பாக, அவ்வழியின் முடிவாகிய ஜீவனைப்பற்றி கவனிப்போம். நாம் ஏற்கெனவே பார்த்தபடி மனித ஜீவனுக்கு மேலானதும், கீழானதுமான பல்வேறு ஜீவன் நிலைமைகள் இருக்கலாம். ஜீவன் என்ற சொல் பரந்துவிரிந்த, பலவகைப்பட்ட ஜீவன்களைக் குறிக்கின்ற பொதுவான சொல்லாகும். ஆனால் இங்கு கர்த்தர், ஜீவன்களிலேயே உயர்ந்த ஸ்தானமாகிய தெய்வீக சுபாவத்தை அதாவது அழியாமையை தம்மால் அழைக்கப்பட்டு அதற்காக ஓடுபவர்களுக்கு பந்தயப் பரிசாக அளிப்பதையே குறிப்பிடுகிறார். ஜீவன் என்றால் என்ன ? நம்மில் இருக்கிற ஜீவனை நாம் உணர்வதோடு நில்லாமல், மிருக ஜீவன்களுக்குள்ளும், மரம் செடிகளிலும் இயங்குகின்ற ஜீவனைக் காண்கிறோம். உயர்ந்த சுபாவங்களையுடைய தேவ தூதர்கள் மற்றும் தெய்வீக சுபாவங்களிலும் இதே ஜீவன் இயங்குவதாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு விசாலமான கருத்தடங்கிய ஒரு சொல்லுக்கு பொருளை எப்படி நாம் விவரிப்போம் ?

எல்லா ஜீவன்களிலும் இருக்கின்ற ஜீவ ஊற்றின் இரகசியங்களை நம்மால் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், தெய்வீக ஜீவியாகிய யேகோவா தேவனே ஜீவன்களுக்கெல்லாம் ஊற்று என்றும், இந்த ஜீவனிலிருந்தே மற்ற அனைத்து சிறு ஊற்றுக்களும் புறப்படுகின்றன என்றும் அறிகிறோம். உயிருள்ள அனைத்தும் ஜீவனுக்காக அவரையே சார்ந்திருக்கின்றன. அவராலேயே உண்டாக்கப்படுகின்றன. தேவனிடத்திலிருக்கின்ற ஜீவனும், அவரது சிருஷ்டிகளிடத்தில் இருக்கின்ற ஜீவனும் ஒன்றே. இது சக்தியின் ஊற்றே தவிர, இது ஒரு பொருளல்ல. இந்த பெலனானது, தேவனுக்குள் சுபாவத்திலேயே உள்ளது. ஆனால், அவரது சிருஷ்டிகளிடத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட சில நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கிறபடியால் தேவனே அதற்குக் காரணரும் ஊற்றும் கர்த்தாவுமாயிருக்கிறார். சிலர் எண்ணுகிறபடி, சிருஷ்டியானது சிருஷ்டித்தவரின் சுபாவமாகவோ அவரது சந்ததியாகவோ, எவ்விதத்திலும் இராமல், ஜீவனானது வழங்கப்பட்ட தேவனுடைய கைவேலைப்பாடாய் இருக்கின்றது.

தெய்வீக சுபாவத்தில் மட்டுமே ஜீவனானது சுயாதீனமாயும், எல்லையில்லாததாயும், வற்றாததாயும், எப்போதும் தொடர்ந்து இருக்கிறதாயும், மற்ற எந்த சூழ்நிலைகளாலும் பிறப்பிக்கக் கூடாததாயும், கட்டுப்படுத்தக்கூடாததாயும் இருக்கிறது என்ற உண்மையை உணர்ந்திருத்தல் வேண்டும். யேகோவா தேவன் தம் சிருஷ்டிகள் ஜீவித்திருப்பதற்காக, தாம் நியமித்ததும், பராமரித்து வருவதுமான இயற்பியல் (physics) கோட்பாடுகளுக்கெல்லாம் அதிகாரியாய் இருக்கிறார் என்று நாம் அறிகிறோம். தெய்வீக சுபாவத்திற்கு மட்டுமே உரிய இந்தக் குணமே அழியாமை என்று அழைக்கப்படுகிறது. நாம் முந்தின அதிகாரத்தில் பார்த்ததுபோல, அழியாமை என்பது மரிக்கக்கூடாத நிலைமை என்பதோடு, நோயற்றதும், வலியற்றதுமான நிலைமையாகும். மெய்யாகவே அழியாமை என்பதும் தெய்வீகத்துவம் என்பதும் ஒரே பொருளையுடைய இணையான இரு வார்த்தைகளே. சூரியனிலிருந்து பூமிக்கு ஒளியும் சக்தியும் கிடைப்பதுபோலவே, எல்லா உயிர்களும், ஆசீர்வாதங்களும், நன்மையுமான எந்த ஈவும் பரிபூரணமான எந்த வரமும், தெய்வீகத் தன்மையுடைய அழியாத ஊற்றிலிருந்து வருகிறது.

சூரியன் பூமிக்கு ஒரு பெரிய ஒளியின் ஊற்றாக இருந்து, அனைத்துப் பொருட்களுக்கும் தன் ஒளியைக் கொடுத்து, பொருளின் தன்மைக்குத் தகுந்தவாறு வெவ்வேறு நிறங்களையும் பலதரப்பட்ட வெளிச்சங்களையும் உண்டாக்குகிறது. சூரிய வெளிச்சம் ஒன்றாயினும், அது வைரத்தின்மேல் படும்போதும், செங்கல் மற்றும் பல்வேறு கண்ணாடிகளின்மேல் படும்போதும், பொருட்களின் தன்மைக்கேற்ற பற்பல நிறங்களை அளிப்பதோடு, குறிப்பிடும்படியாக பல விளைவுகளையும் உண்டாக்குகிறது. வெளிச்சம் ஒன்றுதான், ஆனாலும் பல்வேறு பொருட்களின் மீது ஒளிரும்போது, அந்தந்தப் பொருட்களின் கிரகிக்கும் சக்தியிலும், பிரதிபலிக்கும் தன்மையிலும் வித்தியாசப்படுகின்றன. அவ்வாறே ஜீவனுக்கடுத்த விஷயத்திலும் காணப்படுகின்றது. வற்றாத ஒரே ஜீவ ஊற்றிலிருந்தே அனைத்து ஜீவன்களும் வெளிப்படுகின்றன. கடலில் கிடைக்கும் சிப்பிக்கு ஜீவன் உள்ளது. ஆனாலும் செங்கல், சூரியனின் வெளிச்சத்தை வெளிப்படுத்தக்கூடாத தன்மையைப் பெற்றிருப்பதைப்போல் சிப்பியின் வடிவமைப்பும் அதிக ஜீவனைப்பெறவும்



உபயோகிக்கவும் முடியாத தன்மையைப் பெற்றிருக்கிறது, அதுபோலவே மிருகங்கள், பறவைகள், மீன்கள் போன்றவைகளும் அதிக ஜீவனை உபயோகிக்க முடியாத தன்மையைப் பெற்றிருக்கின்றன. சூரிய வெளிச்சம் பட்டு பிரகாசிக்கின்ற பலவகையான கண்ணாடிகளைப் போல் இந்தப் பலவிதமான ஜீவன்களும், தாங்கள் பெற்றிருக்கின்ற ஜீவனுக்குரிய வல்லமைகளை வெவ்வேறுவிதமாகக் காட்டுகின்றன.

சூரிய ஒளியைப் பெறும் பட்டை தீட்டப்பட்ட வைரக்கல்லானது, தன்னில்தானே ஒளியைப் பெற்று, பிரதிபலிப்பதுபோலவும், தானே ஒரு சிறு சூரியனைப் போலவும் விளங்குகிறது. "தேவ தூதரிலும் சற்று சிறியவனாக" உண்டாக்கப்பட்ட தேவனுடைய மேன்மையான சிருஷ்டிகளில் ஒருவனான மனிதனும் அவ்வாறே இருக்கின்றான். தேவன் ஏற்பாடு செய்திருக்கின்ற வழிமுறைகளின்படி ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும், அதைத் தற்காத்துக்கொள்ளவும், அந்த ஜீவனின் ஒளி மங்கிவிடாதபடி காத்துக்கொள்ளக்கூடியவாறு மனிதன் அற்புதமாக உருவாக்கப்பட்டான். ஆதாம் பாவத்தில் விழுவதற்கு முன்பாக பூமிக்குரிய சிருஷ்டிகள் அனைத்தைக்காட்டிலும் மேலான உயிரினமாக இருந்தாலும், உயிர் கொள்கையில் எந்தவிதமான வித்தியாசமுமில்லை. ஆனால், சூரிய ஒளி வைரத்தின் மீது படாவிட்டால் எந்தவொரு ஒளியையும் பிரதிபலிக்காததுபோலவே மனிதனுக்குள் உயிர் தொடர்ந்து இருக்கும் வரை மட்டுமே வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மனிதன் தன்னில்தானே ஜீவனுடையவனல்ல. எவ்வாறு வைரம் ஒளியின் ஊற்றாக இல்லையோ அதுபோலவே மனிதனும் ஜீவ ஊற்றல்ல. நாம் நமக்குள்ளாக வற்றாத ஜீவனை உடையவர்கள் அல்ல என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் உண்டு. அல்லது, வேறு வார்த்தையில் கூறுவோமாகில், நாம் அழியாமை வாய்ந்தவர்கள் அல்ல. பாவம் நுழைந்ததுமுதல் மனுக்குலத்தார் அனைவர் மேலும் மரணம் ஆட்கொண்டிருப்பதே அதற்கான சாட்சியாகும்.

ஏதேனிலிருந்த மனிதன் ஜீவ விருட்சங்களை பயன்படுத்தும் உரிமையை தேவன் ஏற்பாடு செய்திருந்தார். அவன் வைக்கப்பட்டிருந்த பரதீசு, "பார்வைக்கும் அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களால்" நிறைந்திருந்தது. (ஆதி.2:9,16,17) உண்ணுவதற்கு தேவன்

கொடுத்திருந்த பலவகை ஜீவ விருட்சங்களுள் ஒரு மரத்தின் கனி மாத்திரம் உண்ணக்கூடாது என்று தடை செய்யப்பட்டிருந்தது. நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை அப்போதைக்குமட்டும் புசிக்க வேண்டாம் என்று தடை செய்யப்பட்டிருந்தபோதிலும், அவன் ஜீவனோடு வாழும் பொருட்டு மற்ற எந்த மரத்தின் கனியையும் புசிக்கத் தடை செய்யப்படவில்லை. அவன் மீறுதலுக்குட்பட்ட பிறகு அந்த ஜீவ விருட்சங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, அதனால் மரணதண்டனையானது நிறைவேறும்படி செய்யப்பட்டது. (ஆதி. 3:22)

வைரக்கல் தொடர்ந்து பிரகாசிப்பது தொடர்ச்சியான சூரிய ஒளி வழங்கப்படுவதை சார்ந்தே இருப்பதுபோல், மனுக்குலத்தாரின் மகிமையும் அழகும் ஜீவ வல்லமை தொடர்ந்து அளிக்கப்படுவதையே சார்ந்திருக்கிறது. பாவத்தில் மனுக்குலம் வாழும் உரிமையை இழந்ததால், ஜீவனுக்குரிய நன்மைகள் நிறுத்தப்பட்டது. உடனடியாக மனிதன் தன் அறிவுக்கூர்மையையும் அழகையும் இழந்து இறுதியில் விழுந்துபோன தன் இறுதி அடையாளத்தை கல்லறையில் இழக்கிறான். அவனது வடிவ அழகு, பொட்டரிப்பைப்போல் அழிந்துபோகிறது. (சங்.39:11) தன்மேல் படும் ஒளியை நிறுத்தும்பொழுது, தன் அழகையும் பிரகாசத்தையும் வைரம் இழந்துவிடுவதைப்போல் மனிதனும் ஜீவ வல்லமையை தேவன் எடுக்கும்போது மரித்துப்போகிறான், “மனுப்புத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே?” (யோபு 14:10) “அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான். அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களை கவனியான்.” (யோபு 14:21) “நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே.” (பிரச. 9:10) ஆனால், மீட்கும்பொருள் கொடுக்கப்பட்டு, நம் மீட்பரால் மரண தண்டனைக்கு ஈடாக பலி செலுத்தி, தீர்ப்பை நீக்கினபடியால் சம்பத்தின் (மனிதன்) அழகு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, நீதியின் சூரியன் தன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்தோடு உதிக்கும்போது (மல்கி. 4:2), மனிதன் மீண்டும் சிருஷ்டிகரின் சாயலைப் பூரணமாய் பிரதிபலிப்பான். கிறிஸ்துவின் பாவ நிவாரண பலியின் மூலமாக “பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் எழுந்திருப்பார்கள்.” அப்பொழுது அனைத்துக் காரியங்களும் முந்தின நிலைமைக்கு திரும்பக்கொடுக்கப்படும். அனைத்தும் மறுசீரமைக்கப்படும். அந்நாட்களில் இரட்சகருக்கு கீழ்ப்படிபவர்கள் அனைவரும் பரிபூரண



மனித நிலையை முடிவில் அடைய, அதற்கேற்ற வாய்ப்புக் கொடுக்கப்படும்.

இருந்தபோதிலும் மேலே கூறப்பட்ட வெகுமதி நெருக்கமான வழியின் முடிவில் கிடைக்கும் வெகுமதியல்ல என்று இயேசு குறிப்பிடுகிறார். நெருக்கமான வழியில் நடப்பவர்களுக்கு “தெய்வீக சுபாவம்” வெகுமதியாக வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருப்பதை மற்ற வேதப்பகுதிகளிலிருந்து அறிகிறோம். அதாவது தன்னில்தானே ஜீவனுடைய நிலைமை, தெய்வீக சுபாவத்தில் மட்டுமே பெற்றிருக்கக்கூடிய உன்னத நிலைமையில் உள்ள ஜீவன்–அழியாமை. எப்பேர்ப்பட்ட ஒரு நம்பிக்கை! இப்படிப்பட்ட உன்னத மகிமையை அடையத் தேடுகிறோமா? உறுதியானதும், வெளிப்படையான இப்படிப்பட்ட அழைப்பு இல்லாவிடில் ஒருவரும் இதைப் பெற்றுக்கொள்ள நாட முடியாது.

தெய்வீக சுபாவம் அல்லது அழியாமை என்பது ஆதியில் தெய்வீகத் தன்மை உடையவருக்கே உரியது என்று 1 தீமோ. 6:14–16இல் நாம் வாசிக்கிறோம். “அவர் (இயேசு), அவருடைய காலத்தில் (ஆயிரமாண்டு யுகம்) நித்தியானந்தமுள்ள ஏக சக்ராதிபதியும், இராஜாதி இராஜவும் கர்த்தாதி கர்த்தரும் ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியும் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்.” மற்ற ஜீவிகளான தூதர்கள், மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மீன்கள் போன்றவை தாங்கள் பெற்றிருக்கிற ஜீவ வடிவமைப்புக்கேற்றவாறு குணநலனிலும், வல்லமையிலும், தன்மையிலும் வேறுபட்டிருந்து, தங்களைச் சிருஷ்டித்தவர் மூலமாய்ப் பெற்றிருக்கிற சகலத்திலும் அவருக்குப் பிரியமாக நடந்துக்கொள்கிறது.

ஆதியில் யேகோவா மாத்திரமே சாவாமையைக்கொண்டிருந்தார். அதே அழியாமையாகிய தெய்வீகச் சுபாவத்தை தம் குமாரனும், நம் கர்த்தருமாகிய இயேசுவுக்கு அளித்து, எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார் என்று அறிகிறோம். ஆதலால், இயேசு தற்போது பிதாவின் சாயலை (தன்மையின் சொரூபம்) அடைந்திருக்கிறார். (எபி. 1:3) ஆகவே, “பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராக இருக்கிறதுபோல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராக இருக்கும்படி

அருள்செய்திருக்கின்றார்.'' (யோவான் 5:26) (சாவாமை என்பதற்கு தேவனுடைய விளக்கம் என்னவெனில், மற்ற எந்த ஆதாரத்திலுமிருந்து ஜீவனை பெறாமல், மற்ற எந்தச் சூழ்நிலையையும் சார்ந்திராமல், தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருத்தல்) நம் கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்ததிலிருந்து இருவர் சாவாமை நிலையில் இருக்கின்றனர். அப்படிப்பட்ட நிலைமையே சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்படும் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய சபைக்கு அளிக்கப்படும். இது மாபெரும் தேவ கிருபையே! இந்த மாபெரும் பரிசை திருச்சபையில் பெயரளவில் உள்ள திரள்கூட்டத்தார் பெறுவதில்லை. மாறாக, குருவின் அடிச்சுவடுகளை நெருக்கமாய்ப் பின்பற்றி நடந்து, ஜெயங்கொள்கிற சிறுமந்தை வகுப்பாரே பெறுவர். அவர்கள் மரணபரியந்தம் நெருக்கமான வழியில் பலியின் ஜீவியம் ஜீவித்து, அவருக்கொப்பாக இருப்பர். இவர்கள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, தெய்வீகச் சாயலையும், வடிவத்தையும் பெற்றுக்கொள்வார்கள். நெருக்கமான வழியில் நடப்போர் இந்த அழியாமையையும், சுயாதீனத்தையும் தம்மில்தாமே ஜீவனுடையவர்களாய் இருத்தலையும், தெய்வீகச் சுபாவத்தையும் அடையும்படி வழி நடத்தப்படுவர்.

இந்த வகுப்பார் பிரேதக் குழிகளிலிருந்து மனித ஜீவிகளாக எழுப்பப்பட மாட்டார்கள். ஏனெனில், கல்லறையில் அவர்கள் ஜென்ம சரீரமாக விதைக்கப்பட்டாலும், ஆவிக்குரிய சரீரமாகவே எழுப்பப்படுவார்கள் என்று அப்போஸ்தலர் உறுதிபடக் கூறுகிறார். பூமிக்குரிய மனித சுபாவத்தை இவர்கள் அனைவரும் முதலில் தரித்திருந்ததுபோல, பரலோகத்திற்குரிய சாயலை ''மறுரூபமாக்கப்படுதலின்'' மூலம் அணிந்து கொள்வார்கள். ஆனால், ''இனி எவ்விதமாய் இருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை.'' ஆவிக்குரிய சரீரம் இன்னதென்று இன்னும் நாம் அறியவில்லை. ஆனால், ''அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம்.'' மேலும், ''இனி வெளிப்படவிருக்கும் மகிமையில் அவரோடுகூட பங்கடைவோம்.'' (1 யோவா. 3:2; கொலோ. 1:27; 2 கொரி. 4:17; யோவா. 17:22; 1 பேதுரு 5:10; 2 தெச. 2:14)

சுபாவ மாறுதலுக்கான பரம அழைப்பு, விசேஷமாக சுவிசேஷ யுக



காலத்திற்கு மட்டுமே உரித்தானது மட்டுமன்றி, இந்த யுகத்தில் முன் வைக்கப்பட்டிருக்கும் மேலான வெகுமதி இது மட்டுமே. ஆகையால், இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் எடுத்துரைத்த நமது கர்த்தரின் வார்த்தைகளின்படி தற்போது வைக்கப்பட்டிருக்கும் ஒரே பரிசையடைய, நெருக்கமான பாதையில் செல்லாத மற்ற அனைவரும், கேட்டுக்குப் போகிற விசாலமான பாதையில் செல்பவர்களோடு சேர்க்கப்படுகின்றனர். மற்றவர்கள் இன்னும் விசாலமான வழியிலேயே தொடர்ந்து இருக்கின்றனர். நெருக்கமான வழியில் நடப்போர் மட்டுமே, இவ்வுலகத்திற்கு வரும் தண்டனையிலிருந்து தப்பித்திருக்கிறார்கள். இப்பொழுது திறந்திருக்கக்கூடிய இந்த ஒரே மார்க்க வழியில், அநேக கஷ்டங்கள் இருக்கிறபடியால், ஒருசிலர் மட்டும் இதில் நடக்க கவனம் செலுத்துகிறார்கள். மனுக்குலத்தின் பெரும்பாலானோர் பலவீனத்தில் இருக்கிற முழு மனுக்குலமும் திருப்தியடைய உதவும் விசாலமான, சுலபமான வழியையே தெரிந்துகொள்கின்றனர்.

இந்த நெருக்கமான பாதையானது, அழியாமையாகிய ஜீவனில் முடிவடைகிற போதிலும், இது ஒரு மரணவழி என்றும் அழைக்கப்படலாம். ஏனெனில், மனித சுபாவத்தை மரணபரியந்தம் பலி செலுத்துவதன் மூலம் பெறப்படும் பரிசாக இது இருப்பதால் இவ்வாறு அழைக்கலாம். இது ஜீவனுக்கான மரணத்தின் நெருக்கமான பாதையாக இருக்கிறது. இந்த யுகத்தில் தாமாகவே முன் வந்து, தங்களை தேவனுக்கென்று தத்தம் செய்தவர்கள் அல்லது தங்களுடைய மனித உரிமைகளைப் பலிச் செலுத்தினவர்கள், ஆதாமினுடைய குற்றம் மற்றும் மரண தண்டனையிலிருந்து விடுதலைப் பெற்றதாகக் கருதப்படுகின்றனர். ஆனால் ஏற்றக்காலம் வரும்போது, இவர்கள் உலகத்தின் பொதுவான மனுக்குலத்தோடு, அக்குற்றம் மற்றும் மரணதண்டனையிலிருந்து நிஜமான விடுதலையைப் பெற்றுக் கொள்வார்கள். ''மனிதனாகிய கிறிஸ்து இயேசு'' உலகத்தாருக்காக தமது ஜீவனையே பலிசெலுத்தினதுபோல இவர்களும் அவரோடுகூட உடன்பலிசெலுத்துபவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் பலி குறைவானது என்பதால், மற்றவர்களுடைய பலி தேவை என்பதல்ல. ஆனால், அவருடைய பலியே போதுமானதாக இருந்தபோதிலும், அவருடைய மணவாட்டியாக அல்லது உடன் சுதந்தரவாளிகளாக ஆகும்பொருட்டு, அவருக்கு ஊழியஞ்செய்யவும்,

அவரோடுகூட பாடுபடவும் மாத்திரமே இவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உலகமானது மரணத்தீர்ப்புக்குள்ளாக ஆதாமோடுகூட மரித்துக்கொண்டிருக்கும் வேளையில், இந்தச் ''சிறு மந்தையானது,'' ஏற்கெனவே விவரித்துள்ளபடி, விசுவாசம் மற்றும் பலி செலுத்தும் முறையின் மூலமாக, அவர்கள் கிறிஸ்துவோடுகூட மரிப்பதாக எண்ணப்படுகின்றனர். மேலும் அவரோடுகூட தெய்வீக சுபாவத்தையும், மகிமையையும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, தங்களுடைய மனித ஜீவியத்தை அவரோடுகூடப் பலிசெலுத்தி மரிக்கச் செய்கிறார்கள். நாம் நம்புகிறபடி அவரோடுகூட மரித்தோமானால், அவரோடுகூடப் பிழைத்துமிருப்போம். அவரோடுகூடப் பாடுபட்டால் அவரோடுகூட மகிமையும் அடைவோம். (ரோமர் 8:17; 2 தீமோ. 2:11, 12)

இப்பொழுது நெருக்கமான வழியில் மாபெரும் பந்தயப் பரிசைப் பெற ஓடிக்கொண்டிருப்பவர்கள் ஆயிரவருட அரசாட்சியின் துவக்கத்தில் வெகுமதியாகிய அழியாமையைப் பெற்றிருப்பார்கள். இவ்வாறு தெய்வீகச் சுபாவத்தையும் வல்லமையையும் ஆடையாக அணிந்தவர்கள், அந்த ஆயிரவருட ஆட்சியில் உலக ஜனங்களை முந்தின சீருக்குக் கொண்டுவந்து, ஆசீர்வதிக்கும் மாபெரும் பணிக்கு தயார்படுத்தப்படுவார்கள். சுவிசேஷ யுக முடிவில் அழியாமைக்குப் போகிற நெருக்கமான வழி அடைக்கப்படும். ஏனெனில், தேர்ந்தெடுக்கப்படும் ''சிறு மந்தை'' வகுப்பார் பரீட்சிக்கப்படுதலும் நிரூபித்தலும் நிறைவடைந்திருக்கும். ''இப்போதே அனுக்கிரக (கிரேக்கச் சொல் – டெக்டோஸ். ஏற்புடைய, அங்கீரிக்கப்படுகிற) காலம்.'' இக்காலத்தில் தங்களைத் தேவனுக்கேற்ற சுகந்த வாசனையாக பலி செலுத்துபவர்கள், இயேசுவின் புண்ணியத்தில் வந்து, அவரோடுகூட மரிப்பது, தேவனுக்குப் பிரியமான சுகந்த வாசனையான ஒரு பலியாக இருக்கிறது. ஆதாமுக்குத் தண்டனையாக கொடுக்கப்பட்ட மரணம் நிரந்தரமாக என்றென்றைக்கும் அனுமதிக்கப்படாது. ஆயிரவருட அரசாட்சியில் இது நீக்கப்படும். சுவிசேஷ யுகத்தில் மட்டுமே மரணமானது ஒரு பலியாக அங்கீகரிக்கப்பட்டு அதற்குரிய பலன் அளிக்கப்படும்.

இந்த யுகத்தின் பரிசுத்தவான்கள் மட்டுமே ''புதிய சிருஷ்டிகளாக''



ஜீவப்பாதையில் நடக்கிறார்கள். இப்பாதையில் மனித ஜீவிகளாக மட்டும் பலியாக அழிவுக்கென்று ஒப்புக்கொடுக்கிறோம். மனிதப் பிறவிகளாக நாம் கிறிஸ்துவோடு மரித்தோமானால், புதிய ஆவிக்குரிய ஜீவிகளாக அவரோடுகூட பிழைத்துமிருப்போம். (ரோமர் 6:8) ஆகவே, நமக்குள் இருக்கிற தேவனுடைய சிந்தையாகிய மறுரூபமடைந்த புதிய மனதானது, புதிய சிருஷ்டியின் வித்தாக துளிர்விடுகிறது.

புதிய ஜீவன் மரிப்பதற்கு ஏதுவாக எளிதில் நெருக்கப்படக்கூடும். நாம் சத்தியத்தின் மூலமாக ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு மாம்சத்தின் படி ஜீவித்தோமானால், நிச்சயமாகவே சாவோம். அதாவது, நமது ஜீவனை இழந்துவிடுவோம். ஆனால், நாம் ஆவியினாலே மாம்ச சுபாவத்தின் குணங்களை, செய்கைகளை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து நடந்தால், புதிய சிருஷ்டிகளாக நாம் பிழைப்போம். எவர்கள் தேவ ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்களே தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள் என்று பவுல் உறுதிபடக்கூறுகிறார். (ரோமர் 8:13, 14) தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்துகொண்ட அனைவருக்கும் இந்த எண்ணம் மிக முக்கியமானது. நாம் மாம்ச சுபாவத்தை பலியாக கொடுக்க தேவனோடு உடன்படிக்கை செய்திருப்போமானால் பிறகு, அந்தப் பலி அவரால் அங்கீகரிக்கப்பட்டிருக்குமானால், அந்நிலையில் மீண்டும் அதை எடுத்துக்கொள்ள முயற்சிப்பது பயனற்றக் காரியம். மனித சுபாவம் மரித்ததாக தேவனால் தற்போது கருதப்படுகிறது. நிச்சயமாகவே அது மரிக்க வேண்டும். மரித்த அது ஒருபோதும் திரும்பக்கொடுக்கப்படாது. இதெல்லாம் கிடைக்கும்போது, நாம் திரும்பி மாம்சத்தின்படி நடந்தால், அது புதிய ஆவியின் சுபாவத்தை இழந்து, பெறக்கூடிய சிறுசிறு மானிட சந்தோஷங்கள் மட்டுமே.

எனினும் தேவனோடு நல்மனசாட்சியின் உடன்படிக்கைச் செய்து, பரம அழைப்பின் பரிசைப்பெற விரும்புகிறவர்களில் அநேகர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தாலும், உலக கவர்ச்சிகளாலும், மாம்ச இச்சைகளினாலும், சாத்தானின் தந்திரங்களினாலும் ஓரளவு மேற்கொள்ளப்படுகிறார்கள். தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் பரிசுப்பொருளை கொஞ்சம் கவனிக்கத் தவறி தேவ தயவையும் உலக

தயவையும் இரண்டையும் தக்கவைத்துக்கொள்ளும் மத்திய வழியில் நடக்கப் பிரயாசப்படுகிறார்கள். ''உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை'' (யாக். 4:4) என்பதை மறந்துவிடுகிறார்கள். பரம அழைப்பின் பந்தயப்பரிசைப் பெறுவதற்காக ஓடுபவர்களுக்கான புத்திமதி என்னவெனில், உலகத்தில் அன்பு கூராதிருங்கள், ஒருவர் மற்றொருவரின் கனப்படுத்துதலைத் தேடாமல், தேவனிடமிருந்து மட்டுமே வரக்கூடிய கனத்தைத் தேடுங்கள். (1 யோவா. 2:15; யோவா. 5:44)

இந்த உலகை நேசித்தப்போதிலும், கர்த்தரை முழுமையாக கைவிடாமலும் தங்கள் உடன்படிக்கையைப் புறக்கணியாமலும் இருக்கிற இவர்கள் அக்கினியாகிய தண்டனையால், துன்பத்திற்குள்ளாக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலன் கூறுவதுபோல், இவர்களுடைய ஆவி (புதிதாக ஜெனிப்பிக்கப்பட்ட ஆவி) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படிக்கு மாம்சத்தின் அழிவுக்காக சாத்தானிடம் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்கள். (1 கொரி. 5:5) சிட்சையினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு தங்களைச் சீர்ப்படுத்துவார்களானால், முடிவில் ஆவிக்குரிய நிலைமையைப் பெற்றுக்கொள்வார்கள். தேவதூதர்களுக்கு இருக்கக்கூடிய நித்திய ஜீவனை இவர்கள் சுதந்தரித்தாலும், பரிசுப்பொருளாகிய அழியாமையை இழந்துபோகிறார்கள். அவர்கள் தேவனுடைய ஆலயத்தில் அவரது சிங்காசனத்திற்கு முன்பாக தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து நின்று, அவருக்கு ஊழியம் செய்வார்கள். (வெளி. 7:9–17) அது மகிமையானதாக இருந்தபோதிலும், தேவனுடைய ஆசாரியர்களும் இராஜாக்களுமாக இயேசுவோடு சிங்கானத்தில் அவரது மணவாட்டியாக உடன் சுதந்தரராக, அழியாமையின் கிரீடம் தரித்தவர்களாக, ஜெயங்கொண்டு உட்கார்ந்திருக்கும் சிறுமந்தை வகுப்பாரின் மகிமைக்கு ஒப்பானதல்ல.

நம்முடைய வழி கரடுமுரடாகவும் செங்குத்தாகவும், குறுகலானதாகவும் இருக்கிறது. இப்பயணத்தில் முன்னேறுவதற்கு பலம் அளிக்கப்படாவிட்டால் ஒவ்வொரு படிக்கட்டையும் கடந்து இலக்கை நாம் அடைய முடியாது. ஆனால், நமது அதிபதியின், வார்த்தை உற்சாக மூட்டுகிறது. ''திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்.'' ''என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்.'' (யோவான் 16:33; 2கொரி.12:9) கடினமான இந்த வழி தேவனுடைய சொந்த ஜனங்கள் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட, தனியே பிரித்தெடுத்து நடத்தும் கருவியாக இருந்து, ''தேவனுடைய சுதந்தரரும், இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாக'' இருக்கும்படியாக மாற்றுகிறது. காரியங்களை இவ்வாறு நோக்கும்போது, விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தைப் போராடும் போது, தெய்வீக சுபாவமாகிய அழியாமையாகிய ''மகிமையின் கிரீடத்தைப்'' பற்றிக்கொள்ள வேண்டுமானால், ''நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்.'' (2 தீமோ. 4:8; 1 பேது. 5:4)



## பெரும்பாதையான பரிசுத்த வழி

சுவிசேஷ யுகத்தின் விசேஷமான நம்பிக்கை மகா மேன்மையும் மகிமையுமுள்ளதாக இருந்தாலும், அதன் வழி கடினமானதாய் உள்ளது. நெருக்கமானதும் தடை ஏற்படுத்துகிறதுமான அவ்வழியில் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் அபாயங்களையும் கடின அனுபவங்களையும் சகித்தும் நடக்க வேண்டியிருப்பதால், ஒரு சிலர் மட்டுமே அதைக் கண்டுபிடித்து, அதன் முடிவில் மாபெரும் பரிசை அடைவார்கள். பின்பு வரப்போகிற யுகத்தில் அது முற்றிலும் வேறுபட்ட புதிய ஒழுங்காக இருக்கும். அந்த யுகத்தில் வித்தியாசமான நம்பிக்கை கொடுக்கப்படுவதால், அதில் நடக்க வித்தியாசமான வழியும் ஏற்படுத்தப்படும். அழியாமையை நோக்கிச் செல்லும் வழியானது, மனித சுபாவத்தை நிரந்தரமாக பலியிடக்கூடிய, அதாவது, நியாயமான மற்றும் சரியான நம்பிக்கைகளையும், ஆசை இச்சைகளையும் பலிச்செலுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. ஆனால், உலக மனுக்குலம் மாம்சத்தில் பரிபூரணம் அடையும் வழியோ, அதாவது உலகத்தின் நம்பிக்கையாகிய திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைப்பெற வேண்டுமானால் மனித உரிமைகளையோ அல்லது அதன் சலுகைகளையோ பலியிடாமல், அவைகளைச் சரியான வகையில் அனுபவிக்க, பாவத்தை மாத்திரம் தள்ளிவிடுதல் அவசியமானதும் அதுவே போதுமானதுமாகும். உலகத்தில் பாவம் பிரவேசிக்கும் முன் ஆதாம் பெற்றிருந்த தேவ சாயலை மீண்டும்

அடையும்படிக்கு இப்பெரும் பாதையில் நடக்கிற ஒவ்வொருவரும் சுத்திகரிக்கப்பட்டு முந்தின சீரை அடைவார்கள்.

பரிபூரண மனித ஜீவனை அடைவதற்கான வழி மிகவும் எளிதானதாகவும், சுலபமானதாயும் இருக்கும்படியாக ஏற்படுத்தப்படும். ஒருவனும் இவ்வழியில் தவறிவிடாதபடிக்கு தெளிவான பாதையாக அது இருக்கும். அவ்வழியில் வழிப்போக்கனும், பழக்கமில்லாதவனும் வழிதப்பிப்போக மாட்டார்கள். (ஏசா.35:8– லீசர் மொழிபெயர்ப்பு) ஒருவனும் தன் அயலானை நோக்கி, கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை. ஏனெனில் சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் எல்லாரும் கர்த்தரை அறிந்து கொள்வார்கள். (எரே. 31:34) ஒரு சிலர் மட்டும் கண்டுபிடிக்கிற நெருக்கமான வழியைப்போல இப்பாதை இராமல், பொதுவான நெடுஞ்சாலையைப்போல் இருக்கும். இது “பெரும்பாதை” என்று அழைக்கப்படுகிறது. கரடுமுரடானதும், செங்குத்தானதும் கடினமானதுமான நெருக்கமான வழியைப்போல் இராமல், விசேஷமாக தயார்படுத்தப்பட்டு, பயணிகள் எளிதாகவும் வசதியாயும், சுகமாயும் பயணம் செல்லும் வகையில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கும். அது மீட்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும், அதாவது அனைவரும் பயணம் செல்வதற்காக திறக்கப்பட்டிருக்கும் செம்மையான வழியென்று எரே.31:8,9 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. கிறிஸ்து அனைவருக்காகவும் மரித்ததை உணர்ந்து, அங்கீகரித்து அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தினால், கிடைத்த வாய்ப்புக்களையும், ஆசீர்வாதங்களையும், யார் ஆதாயப்படுத்திக்கொள்கிறார்களோ அவர்கள் ஒவ்வொருவரும் இந்த பரிசுத்தமானப் பெரும்பாதையில் சென்று, பரிபூரண மனித சுபாவம் மற்றும் நித்திய ஜீவனையும் முழுமையான திரும்பக்கொடுத்தலின் மூலம் அடைவார்கள்.

பெரும்பாதையில் செல்ல ஆரம்பிக்கும் இவர்கள் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாகவோ, பரிசுத்தத்தில் நிற்பவர்களாகவோ அல்லது பரிபூரணர்களாகவோ கருதப்படாமல், இப்பாதையில் நடக்கப் புறப்பட்டு, தங்களுடைய பெருமுயற்சியினாலும் கீழ்ப்படிதலினாலும் அப்போது ஆளுகை செய்யும் மீட்பரின் தயவினால் நிஜமான பரிபூரணத்தை நோக்கிச் செல்வர். இவையனைத்தும் அக்காலத்தில் வல்லமையோடு



ஆட்சிசெய்துவரும் அவர்களது மீட்பரின் ஒத்தாசையால் அடையமுடியும். புதிய இராஜ்யத்தின் ஞானமும் பரிபூரணமான நிர்வாக அமைப்பின் வழியாக ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் அவனவன் தேவைக்கேற்றார்போல் உதவிபெறுவான். இதுவே மீட்கும் பொருளின் உன்னத பலனாக இருக்கிறது. நமது கர்த்தரும் மனிதனுமாகிய இயேசு கிறிஸ்து அனைவருக்குமான மீட்கும்பொருளாக தம்மையே கொடுத்து எல்லோரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைந்து, அதன் மூலமாக பரிபூரண மனித சுபாவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்பினதால் ஏன் உடனேயே அனைவருக்கும் நன்மையளிக்கும் அகலமானப் பெரும்பாதையை உண்டாக்கக் கூடாது? ஏன் தடைகளையும் இடறுதற்கேதுவான கற்களையும், படுகுழிகளையும், கண்ணிகளையும் இப்பொழுதே நீக்கக்கூடாது? நெருக்கமான கரடுமுரடான, முட்கள் நிறைந்த, கண்டுபிடிக்கக் கடினமான, நடப்பதற்கு மிகவும் கஷ்டமான ஒரு வழியை உண்டுபண்ணி இருப்பதற்குப் பதிலாக, தேவனோடு மறுபடியும் முழு இசைவாகும்படி, பாவிக்கு ஏன் உதவி செய்யக்கூடாது? சிலர் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்பார்க்காததினால் இந்தப் பாடத்தில் குழப்பமான கருத்துக்களுக்கு வழிநடத்தப்படுகிறார்கள். தற்காலத்திலுள்ள விசேஷமானப் பரிசையடைய நடத்தும் நெருக்கமான வழியானது, கிறிஸ்துவின் சரீரஅங்கமும், உடன்சுதந்தரர்களுமாகிய சிறுமந்தையை அழைத்து, சோதித்து தெரிந்தெடுக்கவும், தலையாகிய கிறிஸ்துவோடு அவர்களை உயர்த்தி, எல்லா தேசங்களையும் ஆசீர்வதிப்பதற்காகவுமே என்பதை அறியாதிருக்கின்றனர். தேவனுடைய தெய்வீகத் திட்டத்தைக் காணத்தவறி, எளிதாக ஜீவன் பெற உதவும் பரிசுத்த பெரும்பாதை, தற்கால யுகத்திலேயே இருப்பதாக, அப்படிப்பட்ட வழி இல்லாதிருக்கும்போதே, அநேகர் போதிக்க முயல்கின்றனர். தாங்கள் தவறாகப் புரிந்துகொண்ட கொள்கைகளை வேத வசனங்களோடு பொருத்தி, குழப்பமடையச் செய்து, முடிவில் தங்களுடைய பொய்யான கருத்துக்களை உண்மையானவைகளாக பொருத்துகிறார்கள். நெருக்கமான வழியில் செல்பவர்கள் தங்களைத் தாங்களே வெறுத்து, பாவமில்லாத அநேகக் காரியங்களை தியாகம் செய்வதோடுகூட, தங்களைச் சுற்றி நிற்கும் பாவங்களை எதிர்த்து, தொடர்ச்சியாகப் போராட வேண்டியிருப்பதால், இப்பாதை ஒரு தியாகப் பலியின் பாதையாக இருக்கிறது. அவ்வாறு இருக்கும் வேளையில், பெரும்பாதையான வழி விரைவில்

திறக்கப்படும்போது, அவ்வழியானது மேற்சொன்னபடி இராமல், பாவக் காரியங்களை மாத்திரமே தடைச் செய்வதினால், இப்பாதையானது நீதியின் பெரும்பாதையாக வரப்போகிற யுகத்தில் இருக்கும்.

பெரும்பாதையாகிய அந்த வழியைக்குறித்து, அடையாள மொழியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ‘‘அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்ட மிருகம் அங்கே போவதுமில்லை; அங்கே காணப்படவுமாட்டாது.’’ (ஏசா. 35:9) தங்கள் பாவ வழிகளை உதறித் தள்ளிவிட்டு நீதியின் மார்க்கத்தைக் கைக்கொள்வதில் சந்தோஷப்படுவோரின் வழியில் எத்தனைக் கொடிய சிங்கங்கள் தற்காலத்தில் இருக்கின்றன! பொதுவான மனித உணர்வுகளைச் சீர்க்கேடு அடையச் செய்யும், அதாவது உடை, வியாபாரம், வீடு போன்ற அன்றாட வாழ்க்கைச் சம்பந்தப்பட்ட விஷயங்களில்கூட மனசாட்சிக்குக் கீழ்ப்படியாமல், துணிகரமான முயற்சி மேற்கொள்ளுதலாகிய சிங்கம் அங்கே இருக்கிறது. மதுபானத்தை அகற்ற விரும்பி, முயற்சி செய்யும் ஆயிரக்கணக்கான மனிதர்களை மதுபானப்பிரியம் என்னும் சிங்கமானது மதுபானத்தைக் குடிக்கத் தூண்டுகிறது. மதுவை தடை செய்வது தற்காலத்தில் மதுவிலக்கு ஊழியர்களுக்கு மிகவும் கடுமையான வேலையாக இருக்கிறது. இனிவரும் காலத்தில் உண்டாயிருக்கும் அதிகாரம் மற்றும் வல்லமையினால் மட்டுமே மதுவை அகற்ற முடியும். அதுபோலவே, நல்லொழுக்க சீர்த்திருத்தவாதிகள் செய்யும் தகுதியான முயற்சிகளுக்கும் இதே நிலைதான். ‘‘துஷ்ட மிருகம் அங்கே போவதுமில்லை.’’ சுயநலத்திற்காகவும் தனிப்பட்ட நபர்களின் ஆதாயத்திற்காகவும் இயங்கி, பொது நன்மைக்கு இடையூறு விளைவிக்கும் மாபெரும் நிறுவனங்கள் இயங்க அங்கு அனுமதிக்கப்படாது. ‘‘என் பரிசுத்த பர்வதமெங்கும் (இராஜ்யம்) தீங்குச் செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை’’என்று கர்த்தர் கூறுகிறார். (ஏசா. 11:9) அங்கு தீமையுள்ள சில காரியங்களுக்கு எதிராகப் போராடும் கஷ்டங்கள் இருந்தாலும், தற்கால யுகத்தின் நெருக்கமான வழியோடு ஒப்பிடும்போது அது ஒரு சுலபமான வழியாகவே இருக்கும். இடறுவதற்கேதுவான கற்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்படும். ஜனங்களுக்காகச் சத்தியக் கொடி உயர்த்தப்பட்டு, நிலைநிறுத்தப்படும். (ஏசா.62:10) கடந்த காலத்தில் இருந்த அறியாமையும், மூடப்பழக்கவழக்கங்களும் கடந்து போனவைகளாகக் கருதப்பட்டு, நீதி தனக்குரிய வெகுமதியை அடையும். ஆனால், தீமையோ



சுவடில்லாமல் அகன்று விடும். (மல்கி. 3:15–18) சீர்ப்பொருந்தச் செய்வதற்கான சிட்சைகளும் பொருத்தமாக உற்சாகப்படுத்துவதும், தெளிவான போதனைகளும், மனந்திரும்பி வீடுவந்து சேர்ந்த கெட்டக் குமாரனைப்போல, மனுக்குலத்தைப் பயிற்றுவித்து, ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், ஆதாம் இழந்துபோன பரிபூரண மனித சுபாவத்தை அடைவார்கள். இவ்வாறாக ‘‘கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி (அழிவிலிருந்து பரிசுத்த பெரும் பாதைக்கு), ஆனந்தக் களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.’’ (ஏசா. 35:10) நமது கர்த்தர் இரண்டு வழிகளைப் பற்றி மட்டுமே கூறினார். ஏனெனில், மூன்றாவது வழி திறக்கப்பட ஏற்றக்காலம் இன்னும் வரவில்லை. அவ்வாறே நற்காரியங்களை அறிவிக்கும்பொழுது அவர், ‘‘இந்த வேதவாக்கியம் உங்கள் காதுகள் கேட்க இன்றைய தினம் நிறைவேறிற்று’’ என்று கூறின பின், ‘‘நீதியைச் சரிக்கட்டும் நாள்’’ ஏற்பட காலம் இன்னும் துவங்காததால் அதைக் குறித்துச் சொல்லாமல் விட்டுவிட்டார். (ஒப்பிட்டுப் பார்க்கவும் லூக்கா 4:19; ஏசா. 61:2). தற்போது நெருக்கமான வழியானது முடிவடையும் காலக்கட்டத்தை எட்டினபடியால், ஆயிரமாண்டின் விடியற்காலை வெளிச்சத்தில் நீதியின் பெரும்பாதை, நாளுக்குநாள் அதிகத் தெளிவாகக் காணப்பட துவங்குகிறது.

மனுக்குலத்தில் பெரும்பான்மையோர் தற்கால யுகத்தில் பயணம் செய்யும் ‘‘விசாலமான வழியில்’’ ‘‘இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய’’ சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, பலவித மாயையான வழிகளால் நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் கண்டறிந்தோம். ‘‘ஒரே மனிதனுடைய கீழ்ப்படியாமையினால்’’ அவ்வழித் துவங்கியது என்றும், அவ்வழியில் மனுக்குலமானது வெகுவேகமாக ஓடுவதையும் நாம் அறிந்தோம். ‘‘விசாலமான வழி’’ மனுக்குலத்தை அழிவிற்குக் கொண்டுச் செல்கிற நிலைமையிலிருந்து மீட்கும்படி, நம் கர்த்தர் அனைவருக்குமான ஈடுபலியாக தம் ஜீவனையே கொடுத்தார். இதனால் ‘‘பரிசுத்தப் பெரும்பாதை’’ திறக்கப்பட இருக்கிறது; ஏற்ற வேளையில் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்கள் அனைவருக்கும் பெரும்பாதையான வழி சுலபமாகப் பின்பற்றக்கூடியதாக இருக்கும் என்று கண்டோம். அதோடு தற்காலத்திலுள்ள ‘‘நெருக்கமான வழி’’ கர்த்தரது

அதே விலையேறப் பெற்ற இரத்தத்தின் தகுதியினாலே திறக்கப்பட்டது என்றும், இந்த வழியானது ஒரு விசேஷமான பரிசை அடைய வழிநடத்துகிறது என்றும், அனைவருக்கும் ஆசீரை அருளும்படி விரைவில் ஏற்படுத்தப்படவிருக்கும் மகிமை நிறைந்த தேவ இராஜ்யத்தில் நம் கர்த்தராகிய இயேசுவோடு உடன் சுதந்தரரும், தெய்வீகச் சுபாவத்திற்குப் பங்குபெறும்படியாக இக்காலத்தில் நெருக்கமான வழியில் சென்று தெரிந்து கொள்ளப்படுபவர்கள், கடினமான உபத்திரங்களுக்கு உட்படுத்தப்பட்டு, ஒழுக்கத்தில் பரீட்சிக்கப்படுகிறார்கள் என்றும் நாம் அறிந்தோம். இப்படிப்பட்ட உன்னத நம்பிக்கையைப் பெற்றிருப்பவர்கள் இந்தப் பந்தயப் பரிசை அடையும் பொருட்டு, மற்ற அனைத்து நம்பிக்கைகளையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ண வேண்டும். ( பிலி. 3:8–15)

* * * *